# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### விக்சித் பாரத் மரதன் 2025
### சேவை, பங்குடைமை மற்றும் இந்திய-இலங்கை நட்புறவைக் கொண்டாடுதல்

சேவை, பொறுப்பு மற்றும் கூட்டு முயற்சிக்கு அர்ப்பணிக்கப்பட்ட பதினைந்து நாள் சேவா பக்வாடாவின் (17 செப்டம்பர் – 2 அக்டோபர் 2025) ஒரு பகுதியாக, செப்டம்பர் 28 அன்று கொழும்பு காலிமுகத்திடலில் விக்சித் பாரத் மரதன் 2025-ஐ கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம், இந்திய கலாசார சங்கத்துடன் இணைந்து ஒழுங்கமைத்துள்ளது. இந்தக் காலத்தில், சமூகப் பொறுப்பு, மக்கள் பங்கேற்பு மற்றும் சமூக சேவையை ஊக்குவிப்பதற்காக இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

2. இந்த வருட சேவா பக்வாடாவின் முக்கிய சிறப்பம்சமான விக்சித் பாரத் மரதன் 2025, "தேசத்திற்கான சேவைக்கான மரதன்" என்ற தொனிப் பொருளின் கீழ் உலகெங்கிலும் 150க்கும் மேற்பட்ட நகரங்களில் ஏற்பாடு செய்யப்படுகிறது. உலகளவில் முன்னெடுக்கப்படும் இந்த முயற்சி இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களின் 75ஆவது பிறந்தநாளை குறித்து நிற்கின்றது. கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் செப்டம்பர் 28 அன்று ஏற்பாடு செய்யப்படும் 5 கி.மீற்றர் தூர மரதனானது உலகளாவிய விக்சித் பாரத் மரதன் 2025 முன்னெடுப்பின் ஒரு பகுதியாகவும் விக்சித் பாரத்@2047 (அபிவிருத்தி அடைந்த இந்தியா) என்ற தொலைநோக்குப் பார்வையை வலுப்படுத்துவதோடு, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமான நட்புறவு மற்றும் நல்லெண்ணப் பிணைப்புகளைக் கொண்டாடி அவற்றை மேலும் பலப்படுத்துகிறது.

3. இந்தியா இலங்கை இடையிலான நிலையான நட்புறவைக் கொண்டாடும் விதமாக, காலி முகத்திடலில் ஆரம்பிக்கும் 5 கி.மீ. மரதன், புலம்பெயர்ந்த இந்தியர்கள் மற்றும் இலங்கை மக்களின் பங்கேற்புடன் இடம்பெறும். மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான கலாசாரத் தொடர்புகளை வெளிக்காட்டும் இந்திய இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. அத்துடன், இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் தலைமையிலான இந்தியாவின் அபிவிருத்திப் பயணத்தையும் இது சுட்டிக்காட்டும்.

4. புலம்பெயர்ந்த இந்தியர்கள், இந்தியாவின் நண்பர்கள் மற்றும் கொழும்புவாழ் மக்கள் உள்ளிட்ட அனைவரையும் இதில் ஆர்வத்துடன் பங்கேற்று, சேவை மனப்பான்மையை பரப்புமாறு அழைக்கிறோம்.

நிகழ்வு  விபரங்கள்:

இடம் : காலி முகத்திடல்,  கொழும்பு.
திகதி : 28 செப்டம்பர் 2025
நேரம் : காலை 6.00 மணி முதல்

********

கொழும்பு
27 செப்டம்பர் 2025